செ.வெ. எண்:564 நாள்: 20.09.2011

## செய்தி வெளியீடு

சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் கடந்த 26.03.2011 அன்று வெளியிடப்பட்டது. 26.03.2011க்கு பிறகு பெறப்பட்ட விண்ணப்பங்கள் தற்போது நடைபெற்றுவரும் தொடர் திருத்தத்தில் பரிசீலிக்கப்பட்டு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அவற்றிற்கான துணைவாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட வாக்காளர்பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2012–ன் வரைவு வாக்காளர் பட்டியலாக 24.10.2011 அன்று வாக்காளர் பதிவு அலுவலர்களால் வெளியிடப்படும். சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2012–ன் கீழ் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட / நீக்கிட / திருத்தம் / இடமாற்றம் செய்திட விரும்பும் நபர்கள் விண்ணப்பங்களை 24.10.2011 முதல் 08.11.2011 வரை சமர்ப்பிக்கலாம். 30.10.2011 மற்றும் 06.11.2011 ஆகிய இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளிலும் விண்ணப்பங்களை பெறுவதற்கு சிறப்பு முகாம்கள் நடைபெறும். விண்ணப்பங்களை உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களிலோ (அதாவது வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள்) அல்லது வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களிலோ (மாநகராட்சிப் பகுதிகளில் மண்டல அலுவலகங்கள், மற்ற பகுதிகளில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்கள்) அல்லது நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களான வாக்குச்சாவடி நிலையங்களிலோ சமர்ப்பிக்கலாம்.

24.10.2011 முதல் 08.11.2011 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் மீது உரிய ஆணைகள் வாக்காளர் பதிவு அலுவலர்களால் பிறப்பிக்கப்பட்டு, சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2012–ன் இறுதி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு 05.01.2012 அன்று வெளியிடப்படும். வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்கப்படும் இளைய வாக்காளர்களுக்குரிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தேசிய வாக்காளர் தினமான 25.01.2012 அன்று வழங்கப்படும்

**வெளியீடு: –**

**ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**

**P.R. No. 564** **Date:20.09.2011**

**PRESS RELEASE**

The electoral roll for the just concluded General Elections to Tamil Nadu Legislative Assembly, 2011, had been published on 26.03.2011. The forms received after 26.03.2011, are now being processed during the ongoing continuous updation process and a Supplement electoral roll will be prepared after necessary orders are passed by the Electoral Registration Officers. The electoral roll as prepared above, will be published as draft electoral roll on 24.10.2011, by the Electoral Registration Officers under the Special Summary Revision, 2012. The eligible persons desirous of inclusion/ deletion / correction / transposition of their names under Special Summary Revision, 2012, may file applications during the period from 24.10.2011 to 08.11.2011. Special Campaigns are also organised on two Sundays on 30.10.2011 and 06.11.2011 during the above period. The applications may be submitted at the offices of the Assistant Electoral Registration Officers (i.e. Taluk Offices, Municipalities) or in the offices of the Electoral Registration Officers (Zonal Offices in Corporation areas, Revenue Divisional Offices in other areas) or in the Designated Locations (Polling Station Buildings).

2. Necessary orders will be passed by the Electoral Registration Officers on the applications received during the period from 24.10.2011 to 08.11.2011, and a Supplement roll will be prepared and the final electoral roll under Special Summary Revision, 2012, will be published by the Electoral Registration Officers on 05.01.2012. The EPIC for the newly enrolled young electors, will be distributed during the National Voters' Day, i.e., on 25.01.2012.

**Issued By:-**

**Commissioner, Information & Public Relations Dept.,**
**Secretariat, Chennai-9**